தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–06.

ந.க.எண்.075426/டபிள்யூ1/இ1/2022 நாள்.04.07.2023

பொருள்: பள்ளிக் கல்வி - நிருவாக சீரமைப்பு - ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உதவித் திட்ட அலுவலர் / மாவட்ட உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர் - பணியிடங்களை பணிநிரவல் செய்து மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு (தொடக்கக் கல்வி) உதவித் திட்ட அலுவலர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டமை - எஞ்சியுள்ள மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி) - உதவித் திட்ட அலுவலர் பணியிடங்கள் அனுமதித்தல் -சார்ந்து.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண் 100, பள்ளிக் கல்வித் (SSA) துறை, நாள் 16.05.2018
2. அரசாணை (நிலை) எண் 148, பள்ளிக் கல்வித் (SSA) துறை, நாள் 02.09.2022
3. அரசாணை (நிலை) எண் 101, பள்ளிக் கல்வித் (வ.செ.1) துறை, நாள் 18.05.2018
4. அரசாணை (நிலை) எண் 151, பள்ளிக் கல்வித் (பக1(1) துறை, நாள் 09.09.2022
5. அரசாணை(நிலை) எண்.172, பள்ளிக் கல்வித் (ப.க.4(1)) துறை, நாள்.30.09.2022
6. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி 5–வது செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகள், நாள் 01.11.2022
7. பள்ளிக்கல்வி ஆணையர், மாநிலத்திட்ட இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.075426/டபிள்யூ1/இ1/2022, நாள் 14.12.2022
8. சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் கடிதம் எண்.20/சி1/BRC–CRC/ஒபக, நாள் .03.2023
9. அரசாணை (நிலை) எண்.95, பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை, நாள்.26.05.2023

-----

பார்வை 4–ல் கண்டுள்ள அரசாணையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழுள்ளஅனைத்து மாவட்ட கல்வி அலுவலர் பணியிடங்களும், மாவட்டக் கல்விஅலுவலர் (தொடக்கக் கல்வி), மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டும், புதியதாக 32 மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டும்

ஆணை வெளியிடப்பட்டதன் தொடர்ச்சியாக, பார்வை 5-ல் கண்டுள்ள அரசாணையில் தற்போது செயல்பாட்டில் உள்ள 120 மாவட்டக்கல்வி அலுவலகங்கள் மற்றும் கூடுதலாக அனுமதிக்கப்பட்ட 32 மாவட்டக் கல்வி அலுவலகங்கள் என மொத்தம் 152 மாவட்டக் கல்வி அலுவலகங்கள் (தொடக்கக் கல்வி-58, இடைநிலை-55, தனியார் பள்ளிகள்-39) செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வலுவலகங்களுக்கு பணிநிரவல் மூலம் பணியாளர்களை நியமனம் செய்யவும் அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதியதாக உருவாக்கப்பட்ட வருவாய் மாவட்டங்களுக்கு பார்வை 5ல் கண்டுள்ள செயல்முறைகளின்படி பணியிடங்கள் பகிர்ந்தளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் அடைவு நிலையினை மேம்படுத்திடவும், வகுப்பறை நிகழ்வுகளை செம்மைப்படுத்திடவும், எண்ணும் எழுத்தும், இல்லம் தேடிக் கல்வி, பள்ளி மேலாண்மைக் குழு, வானவில் மன்றங்கள், கலைத் திருவிழா போன்ற அரசின் பல்வேறு சீரிய திட்டங்களை தொடக்கக் கல்வியில் முறையாக ஒருங்கிணைந்து செயல்படுத்தவும் மாவட்ட உதவித் திட்ட அலுவலரின் பணி மாவட்டக்கல்வி அலுவலகத்திற்கு (தொடக்கக் கல்வி) மிகவும் இன்றி அமையாததென கருதி 01.11.2022 நாளிட்ட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் செயற்குழு ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) அலுவலகத்திற்கும் ஒரு மாவட்ட உதவித் திட்ட அலுவலர் வீதம் பணியமர்த்திட முடிவெடுக்கப்பட்டதையடுத்து பார்வை 7-ன்படி 24 மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலகத்தில் பணியமர்த்தி ஆணையிடப்பட்டது. இந்த உதவித் திட்ட அலுவலர்கள் (தொடக்கக் கல்வி), மாவட்டக் கல்வி அலுவலரின் (தொடக்கக் கல்வி) நேரடிக் கட்டுப்பாட்டில் பணிபுரிவார்கள் என்றும், இவர்களது ஊதியம் மற்றும் இதர சலுகைகள் வழக்கம்போல தொடர்ந்து ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியிலேயே வழங்கப்படும் என்றும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 9-ல் காண் அரசாணையின்படி எஞ்சியுள்ள மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக் கல்வி) அலுவலகத்திற்கும் 32 உதவித் திட்ட அலுவலர் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண். 100, பள்ளிக்கல்வித் துறை, நாள். 16.05.2018 இன்படி ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத்திட்ட இயக்ககத்துக்காக அனுமதிக்கப்பட்ட 3 அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்/உதவி திட்ட அலுவலர் பணி நிலையிலான பணியிடங்கள் உட்பட 35 உதவி திட்ட அலுவலர் பணியிடங்களை தற்போது இணைப்பில் காணுமாறு மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) அலுவலகங்களுக்கும், தொடக்கக்கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கும் அனுமதித்து ஆணை வழங்கப்படுகிறது.

அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களில் மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலகங்களுக்கு பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும் தலைமையாசிரியர்கள் மூலம் உதவித் திட்ட அலுவலர்கள் பணியிடங்கள் நிரப்பப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களின் ஊதியம் மற்றும் இதர சலுகைகள் வழக்கம் போல தொடர்ந்து ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியிலேயே வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. அரசாணை நகல்–1
2. Annexure –1

**பள்ளிக் கல்வி இயக்குநருக்காக**

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி)
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை)

**நகல்**

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,
   சென்னை–6, (அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது)
2. தொடக்கக்கல்வி இயக்குநர்,
   தொடக்கக் கல்வி இயக்ககம்,
   சென்னை–6 ( தகவலுக்காக அனுப்பப்படுகிறது)

இணைப்பு-1

| வ.எ. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் | ஏற்கனவே உதவித் திட்ட அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்பட்ட அலுவலகம் | தற்போது புதியதாக உதவித் திட்ட அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்பட்ட அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், அரியலூர் | – | 1 |
| 2. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், செங்கல்பட்டு | – | 1 |
| 3. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், சென்னை | 1 | – |
| 4. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,கோயம்புத்தூர் | 1 | – |
| 5. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், பொள்ளாச்சி | – | 1 |
| 6. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், கடலூர் | 1 | – |
| 7 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், (விருத்தாச்சலம் | – | 1 |
| 8 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் தருமபுரி | 1 | – |
| 9 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,ஓசூர் | – | 1 |
| 10 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், திண்டுக்கல் | 1 | – |
| 11 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், ஒட்டன்சத்திரம் | – | 1 |
| 12 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,ஈரோடு | 1 | – |
| 13 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், கோபிச்செட்டிபாளையம் | – | 1 |
| 14 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,கள்ளக்குறிச்சி | – | 1 |

| | | | |
|---|---|---|---|
| 15 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,காஞ்சிபுரம் | – | 1 |
| 16 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,கன்னியாகுமரி | 1 | – |
| 17 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், கரூர் | 1 | – |
| 18 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், கிருஷ்ணகிரி | 1 | – |
| 19 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், ஓசூர் | – | 1 |
| 20 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,மதுரை | 1 | – |
| 21 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,மேலூர் | – | 1 |
| 22 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,மயிலாடுதுறை | – | 1 |
| 23 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், நாகப்பட்டினம் | – | 1 |
| 24 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், நாமக்கல் | 1 | – |
| 25 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், பெரம்பலூர் | 1 | – |
| 26 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், புதுக்கோட்டை | 1 | – |
| 27 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், அறந்தாங்கி | – | 1 |
| 28 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், இராமநாதபுரம் | 1 | – |
| 29 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,பரக்குடி | – | 1 |
| 30 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், இராணிப்பேட்டை | – | 1 |
| 31 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், சேலம் | 1 | – |
| 32 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், ஆத்தூர் | – | 1 |
| 33 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், சிவகங்கை | 1 | – |

| | | | |
|---|---|---|---|
| 34 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், தேவக்கோட்டை | – | 1 |
| 35 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,தென்காசி | – | 1 |
| 36 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,தஞ்சாவூர் | 1 | – |
| 37 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,பட்டுக்கோட்டை | – | 1 |
| 38 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், நீலகிரி | 1 | – |
| 39 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,தேனி | 1 | – |
| 40 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், தூத்துக்குடி | 1 | – |
| 41 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், கோவில்பட்டி | – | 1 |
| 42 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், திருச்சிராப்பள்ளி | 1 | – |
| 43 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், முசிறி | – | 1 |
| 44 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் திருநெல்வேலி | – | 1 |
| 45 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,சேரன்மாதேவி | – | 1 |
| 46 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,திருப்பத்தூர் | – | 1 |
| 47 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், திருப்பூர் | – | 1 |
| 48 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், தாராபுரம் | – | 1 |
| 49 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், திருவள்ளூர் | – | 1 |
| 50 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், பொன்னேரி | – | 1 |
| 51 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், திருவண்ணாமலை | 1 | – |
| 52 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ,ஆரணி | – | 1 |

| | | | |
|---|---|---|---|
| 53 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், திருவாரூர் | 1 | – |
| 54 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், வேலூர் | – | 1 |
| 55 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், விழுப்புரம் | – | 1 |
| 56 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், திண்டிவனம் | – | 1 |
| 57 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், விருதுநகர் | 1 | – |
| 58 | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், சிவகாசி | – | 1 |
| 59 | தொடக்கக்கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை–6 | – | 1 |

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

6/7/2023